

ஆங்கிலத்துக்கான பட்டப்பின் நிறுவகம்
இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள்

2022

தொலைநோக்கு

இலங்கையில் ஆங்கிலமொழி கற்பதற்கும் அத்துடன் பட்டப்பின் படிப்பு மற்றும் ஆராய்ச்சிகள் சார்பில் தலைமை வழங்குவதற்கும் உள்நாட்டு மற்றும் உலகளாவிய தேவைகளுக்கும் போக்குகளுக்கும் அமைவாக படைப்புகளை ஆக்கும் திறனுள்ள வர்களாகவும் சூழ்நிலை சார்ந்தவர்களாகவும் முன்னுரிமையாளராக பிரபல்யமடைதல்.

செயற்பணி

சுயமாக கற்பதன் மூலம் ஆங்கிலமொழி மற்றும் இலக்கிய கல்வியில் பட்டப்பின் படிப்பு மட்டத்திலான கல்வி, ஆராய்ச்சி, ஆசிரியர் கல்வி, புதிய கண்டுபிடிப்புகள் மற்றும் கற்றலில் சிறந்த வாய்ப்புகளை வழங்குதல் உட்பட தேசிய மட்டத்தில் ஆங்கில மொழிக் கல்வியினை மேம்படுத்துவதும் அதற்கு தலைமைத்துவம் வழங்குதலும்.

நோக்கம் 1 : ஆங்கில மொழிக்கல்வி தொடர்பில் உயர் தரமிக்க பட்டப்பின் படிப்பு கல்வியினை உறுதிப்படுத்துதல்

நோக்கம்

1.1 தேசிய ரீதியிலான தேவைகளுக்கு அமைவாக நெகிழ்ச்சிகரமானதும் புதியதுமான நிகழ்ச்சித்திட்டங்களை அபிவிருத்தி செய்தலும் வழங்குதலும்

1.2 நடைமுறையிலுள்ள கல்வி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் பாடநெறிகளை கற்பிக்கும் வழிமுறைகளை விருத்தி செய்தலும் அதன் தரத்தினைப் பேணுதலும்

நோக்கம் 2 : வினைத்திறனுடனும் கண்காணிப்புடனுமான சேவையொன்றை ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் மாணவர் சமூகத்திற்கு வழங்கும் பொருட்டு நிர்வாக செயற்பாட்டினை விருத்தி செய்தலும் பேணுதலும்

நோக்கம்

2.1 நிர்வாக ரீதியிலான செயற்பாடுகளை விருத்தி செய்தல்

2.2 நிர்வாக மற்றும் கல்விசாரா பதவியணியினரின் ஆற்றலை விருத்தி செய்தல்

2.3 நிர்வாக செயற்பாட்டின் போது விருத்தி செய்யப்பட்ட தகவல் தொடர்பாடல் தொழிநுட்பத்தை பயன்படுத்துதல்

2.4 தரவுகளைப் பாதுகாத்தல் மற்றும் சேமித்து வைத்தல் முறைமையினை அபிவிருத்தி செய்தல்

2.5 வலுசக்தியினை சிக்கனமாக பேணுவதற்கும் சுற்றாடல்நேயமிக்கதாக நிறுவனத்தை நடாத்திச் செல்வதற்கும் நிறுவனத்தில் பசுமை பழக்கவழக்கங்களை நடைமுறைப்படுத்துதல்

2.6 வினைத்திறனுடனும் கண்காணிப்புடனுமான சேவையொன்றை ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் மாணவர்களுக்கு வழங்கும் முகமாக ஒத்தாசை நல்கும் செயற்பாட்டின் முறையான நடவடிக்கையினை உறுதிப்படுத்துதல்

நோக்கம் 3 : நிறுவனத்தின் ஆராய்ச்சி வழிமுறைகள் மற்றும் ஆராய்ச்சி ஆற்றலை விருத்தி செய்தலும் பலப்படுத்துதலும்

நோக்கம்

3.1 புத்தாக்க ஆராய்ச்சிகளில் ஈடுபடுதல், உற்பத்தி செய்தல், விளம்பரப்படுத்தல் என்பன பொருட்டு கல்விசார் பதவியணி உறுப்பினர்களுக்கான வாய்ப்புகளை அதிகரித்தல்

3.2 கல்விசார் பதவியணியின் தொடர்ச்சியான தொழில்சார் அபிவிருத்தி

3.3 மாணவர்களின் ஆராய்ச்சி சார்பில் வாய்ப்புகளை வழங்குதல்

3.4 தேசிய முன்னுரிமைகளுக்கு தீர்வுகளை வழங்குவதற்கு ஒத்தாசை நல்கும் நிறுவன ரீதியிலான ஆராய்ச்சிகளை மேற்கொள்தலும் அபிவிருத்தி செய்தலும்

நோக்கம் 4 : தேசிய கொள்கை மற்றும் அபிவிருத்தியின்பால் பங்களிப்பு நல்கும்

அறிவுபூர்வமான கலந்துரையாடல்கள், விவாதங்கள் மற்றும் பயனுள்ள தொனிப்பொருட்கள் என்பவற்றை கட்டியெழுப்பும் மைய நிலையமாதல்

நோக்கம்

4.1 மானிடவியல் மற்றும் சமூகவியல் என்பவற்றில் ஆங்கில மொழிக்கல்வி ஆராய்ச்சி மற்றும் ஆராய்ச்சி முறைகளுக்கான இடவசதிகளைச் செய்தல் இது தொடர்பில் பயனுள்ள தொனிப்பொருட்களை விளம்பரப்படுத்துதல்

4.2 கொள்கை வகுப்பு மற்றும் அமுலாக்கல் பணியில் ஈடுபட்டுள்ள பிரதான நிறுவனங்களுடன் இணைந்து தேசிய அபிவிருத்திக்கு பங்களிப்பு நல்குதல்

பணிப்பாளரின் செய்தி



1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டம் மற்றும் 2005 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவன கட்டளைச்சட்டம் மூலம் தாபிக்கப்பட்ட ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனமானது இலங்கையில் ஆங்கிலக் கல்விக்கென அர்ப்பணிக்கப்பட்ட ஒரேயொரு பட்டப்பின் படிப்பு நிறுவனமாக இருப்பதுடன் ஆங்கில படிப்புகளில் மேலதிக தகைமையும் பயிற்சியும் தேவைப்படுகின்ற கல்வியியலாளர்கள் மற்றும் ஏனைய தொழில்வல்லுநர்களுக்கு உயர் தரமான பட்டப்பின் ஆங்கில மொழி மற்றும் இலக்கிய கல்வியினை வழங்குவதில் பிரதான வகிபாகமொன்றை ஆற்றியுள்ளது. முதன்மை மானிடவியல் மற்றும் சமூகவியல் ஆராய்ச்சி நிறுவனமொன்றாக இந்த நிறுவனத்தின் நற்பெயர் கட்டியெழுப்பப்பட்டுள்ளது. ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் (PGIE) பழைய மாணவர்கள் அநேகமாக அனைத்து தேசிய பல்கலைக்கழகங்களிலும் சிரேட்ட பதவிகளை வகிப்பதுடன் மதிப்புவாய்ந்த வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களில் கலாநிதி (PhDs) பட்டங்களையும் மேலதிக தகைமைகளையும் தொடர்வதற்கு இந்த நிறுவனத்தின் கலை முதுமாணி (MA) பட்டங்களையும் பலர் பயன்படுத்தியுமுள்ளனர்.

தொடர்ந்தும் COVID - 19 தொற்றுநிலைமைக்கு முகங்கொடுத்து வந்தமையினால் 2022 ஆம் ஆண்டானது ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனத்திற்கு அதிக சாவால்மிக்க ஆண்டாக அமைந்தது. ஆயினும் இந்த ஆண்டறிக்கையில் சுட்டிகாட்டப்பட்டுள்ளவாறு, இந்த தொற்று நிலைமையின் மத்தியில் ஏற்பட்ட சவால்களுக்கு முகங்கொடுப்பதற்கு ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் முகாமைத்துவத்தினால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் 2022 ஆம் ஆண்டில் சவால்களுக்கு வெற்றிகரமாக முகங்கொடுப்பதற்கு இந்த கஷ்டமான ஆண்டில் எமது பதவியணியினர் மற்றும் மாணவர்கள் முகங்கொடுத்த சவால்கள் பற்றி நாம் நன்கு அறிவோம். ஆயினும், இலங்கையில் ஆங்கில மொழிக் கல்வித் துறையில் அதன் தொலைநோக்கினை மேம்படுத்தி இணையவழி மற்றும் பௌதிக செயற்பாடுகளுடன் கூடிய கல்வி நடவடிக்கைகளை மேற்கொண்டதன் மூலம் ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனம் நேரடியாக இந்த சவால்களுக்கு முகங்கொடுத்து செயலாற்றியுள்ளது. குறித்த இந்த ஆண்டிலும் உடனடி மற்றும் தொலைநோக்கு தீர்மானங்களை எடுத்ததன் மூலமும் உட்பட திறமுறைகளை பயன்படுத்தியதன் மூலமும் ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனமானது இந்த சவால்களுக்கு வெற்றிகரமாக முகங்கொடுத்துள்ளது.

கலாநிதி ரொமொலா ரசூல்
பணிப்பாளர்
PhD (மெல்பன், அவுஸ்திரேலியா)
MA (ஆசிரியர் கல்லூரி, கொலம்பியா, ஐக்கிய அமெரிக்கா)
BA (களனி, இலங்கை)

ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனம்


2005-10-31 ஆம் திகதியிடப்பட்டதும் 1417/12 ஆம் இலக்கத்தைக் கொண்டதுமான அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்டதும் 2005 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க கட்டளைச் சட்டத்தின் மூலமும் 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகச் சட்டத்தின் 24அ ஆம் பிரிவின் கீழும் அதிமேதகைய சனாதிபதி அவர்களினால் செய்யப்பட்ட கட்டளையின் கீழ் 2005 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க கட்டளைச் சட்டத்தின் மூலம் ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனமானது தாபிக்கப்பட்டுள்ளது.

ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனம்
திருத்தப்பட்ட ஆண்டறிக்கையும் கணக்குகளும் - 2022

பொருளடக்கம்

		பக்க இலக்கம்
1.	**கட்டமைப்பு**	08
	(அ) ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் உறுப்பினர்கள்	09
	(i) முகாமைத்துவ சபை	09
	(ii) இரண்டாம் மொழியாக ஆங்கில மொழி கற்பிப்பதற்கான கல்விசார் பதவியணி	10
	(iii) இரண்டாம் மொழி சூழ்நிலையில் இலக்கியம் கற்பிப்பதற்கான கல்விசார் பதவியணி	12
	(iv) ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் பதவியணி உறுப்பினர்கள்	13
2.	**பணிப்பாளரின் மீளாய்வு**	15
	(அ) சுருக்க அறிமுகம்	15
	(ஆ) முக்கிய நிகழ்வுகள்	17
	(இ) சவால்கள்	21
	(ஈ) எதிர்கால திட்டங்கள்	21
	(உ) ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களும் மாணவர் விபரங்களும்	22
	(ஊ) மீளாய்வு ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள் தொடர்பிலான தகவல்கள்	31
	(எ) மனிதவளம்	31
3.	**முகாமைத்துவமும் நிர்வாக முன்னேற்றமும்**	37
4.	நிலையான அபிவிருத்திக்கான எதிர்கால எதிர்பார்ப்புகள்	38
5.	**கணக்காய்வுக் குழுவின் அறிக்கை**	41
6.	**கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்று**	43
7.	**கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**	69
8.	**கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கைக்கான பதில்கள்**	76

01. **கட்டமைப்பு**


இலங்கை திறந்த பல்கலைக்கழக சபை
இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் மூதவை
ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவன முகாமைத்துவ சபை
ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின்
பணிப்பாளர்
கல்விசார் பதவியணி
நிருவாக பதவியணி
சிரேட்ட விரிவுரையாளர்கள் / விரிவுரையாளர்கள்
சிரேட்ட உதவிப் பதிவாளர் / பதிவாளர்
புத்தக பதியுநர்
கணனி பிரயோக உதவியாளர் / முகாமைத்துவ உதவியாளர்
தொழிலாளர் / வேலைகள் உதவியாளர்

(அ) (i) **ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் முகாமைத்துவ சபையின் உறுப்பினர்கள்**

	பெயர்	பதவிப் பெயர்
1.	பேராசிரியர் எச்.எஸ். ரம்புக்வெல்ல (2022-01-01-2022-02-08) கலாநிதி ரொமொலா ரசூல் (2022-03-01-2022-12-31)	தலைவர் / பணிப்பாளர், ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனம்
9.1.(ஆ) உயர் கல்வி என்னும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சின் செயலாளரினால் அல்லது இந்த விடயத்துக்குப் பொறுப்பான வேறு அமைச்சின் செயலாளரினால் நியமிக்கலாம்.		
2.	திரு.ஏ.கே.செனவிரத்ன (2022-01-01-2022-02-28)	மேலதிக செயலாளர், உயர் கல்வி அமைச்சு
9.1.(ஈ) பல்கலைக்கழக ஆங்கில கல்விப் பிரிவின் தலைவர்		
3.	கலாநிதி என்.கே.அபேசேக்கர (2022-01-01-2022-09-30) கலாநிதி எஸ்.ஏ.ஏ.கே.சத்தரசிங்க (2022-10-01-2022-12-31)	தலைவர், மொழிக் கல்விப் பிரிவு, இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
9.2.(அ) பீடசபையின் பிரதிநிதி ஒருவர்		
4.	பேராசிரியர் எல்.ஆர்.ஜயசேக்கர	ஓய்வுநிலை பேராசிரியர், தாவரம் மற்றும் மூலக்கூறு உயிரியல் கல்வி பிரிவு, களனி பல்கலைக்கழகம்
9.2.(ஆ) ஆணைக்குழுவினால் பெயர் குறித்து நியமிக்கப்படும் ஆங்கில மொழி பற்றிய பேராசிரியர்கள் ஐவர் அல்லது ஆங்கில மொழி கற்பிக்கும் மற்றும் மொழிக் கல்வி (ஏற்புடையதானவாறு) கற்பித்தலுக்கு பொறுப்பான கல்விப் பிரிவின் தலைவர்கள்		
5.	பேராசிரியர் நிலுபர் த மெல்	ஆங்கிலமொழி பற்றிய தலைமை பேராசிரியர், கொழும்பு பல்கலைக்கழகம்
6.	பேராசிரியர் ஜே.மனதுங்க	சிவில் பொறியியல் கல்விப் பிரிவு, மொறட்டுவை பல்கலைக்கழகம்
7.	பேராசிரியர் நெலுக்க சில்வா	பேராசிரியர், ஆங்கிலமொழி கல்விப் பிரிவு, கொழும்பு பல்கலைக்கழகம்
8.	கலாநிதி எம்.லலித் ஆனந்த	முன்னாள் தலைவர், ஆங்கிலமொழி கல்விப் பிரிவு, ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகம்
9..	திருமதி பி.நாகசுந்தரம்	முன்னாள் தலைவர், ஆங்கிலமொழி கல்விப் பிரிவு, ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகம்
9.2.(இ) பல்கலைக்கழக மூதவை சபையினால் நியமிக்கப்படும் உறுப்பினர்		
10	பேராசிரியர் சீ.ஈ.குணரத்ன	தலைவர் - சட்ட கல்வி பிரிவு, இலங்கை திறந்த பல்கலைக்கழகம் (2020 பெப்ரவரி முதல்)

9.2.(ஈ) கல்விப் பிரிவு அதன் உறுப்பினர்களிலிருந்து நியமிக்கப்படும் இரண்டு உறுப்பினர்கள்		
11	கலாநிதி எச்.வி.எம்.ரத்வத்தே	சிரேட்ட விரிவுரையாளர், மொழிக் கல்விப் பிரிவு, இலங்கை திறந்த பல்கலைக்கழகம் - உறுப்பினர், கல்விப் பிரிவு - இரண்டாம் மொழியாக ஆங்கிலம் கற்பித்தல்
12	திருமதி எம்.ஐ.ஜான்ஸ்	சிரேட்ட விரிவுரையாளர், ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனம் (2021-07-14 ஆம் திகதி முதல்)
9.2.(உ) தொழினுட்ப, கல்வி அல்லது நிர்வாக துறைசார்பில் சிறந்த பங்களிப்பினை வழங்கியவர்களிலிருந்து ஆணைக்குழுவினால் நியமிக்கப்பட்ட இரண்டு உறுப்பினர்கள்		
13	கலாநிதி உபாலி சேதர	போசகர், இலங்கை சர்வதேச பௌத்த கல்வி நிலையம்
14	தேசபந்து பேராசிரியர் எம்.ஏ.டி.எஸ்.ஜே.எஸ்.நிரிஎல்ல	சர்வதேச சட்டக் கல்வி பிரிவு, கொழும்பு பல்கலைக்கழகம்
9.2.(ஊ) ஆசிரியர் கல்வியினை பிரதிநிதித்துவப்படுத்தும் பொருட்டு தேசிய கல்வி நிறுவனத்தினால் பெயர் குறிப்பிடப்படும் ஒருவர்		
15	கலாநிதி எஸ்.ஏ.டி.சமரவீர	பிரதி பணிப்பாளர், தேசிய கல்வி நிறுவனம்
பொது திறைசேரியின் பிரதிநிதி		
16	திரு.எச்.எம்.சி.கே.ஹேரத்	பணிப்பாளர், நிதி கொள்கைத் திணைக்களம், பொதுத் திறைசேரி

(ii) **இரண்டாம் மொழியாக ஆங்கிலமொழி கற்பிப்பதற்கான ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் கல்விசார் பதவியணி உறுப்பினர்கள்**

இல.	**பெயர்**	**பதவி**
12.(1)(அ) தலைவராக பணிப்பாளர்		
1.	பேராசிரியர் எச்.எஸ்.ரம்புக்வெல்ல (2022-01-01-2022-02-28) கலாநிதி ரொமொலா ரசூல் (2022-03-01-2022-12-31)	தலைவர் / பணிப்பாளர், ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனம் (2016-03-01 ஆம் திகதி முதல்)
12.(1)(ஆ) தகவல் தொழினுட்பத்திற்குரிய புத்தகங்கள் மற்றும் வேறு ஊடக வளங்கள் உள்ளடக்கப்பட்ட நிறுவனத்தின் கற்பித்தல் பொறுப்பாளர்		
2.	திருமதி ஆர்.அமரசேக்கர (2022-01-01-2022-10-31) கலாநிதி ஐ.எம்.நவரத்ன (2022-11-01-2022-12-31)	நூலகர், இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
12.(1)(இ) உரிய சபைக்கு அல்லது நிறுவனத்திற்கு கல்விசார் பதவியணியினால் நிர்ணயிக்கப்படும் கல்வி சபையின் நிரந்தர ஆசிரியர்கள்		

3.	கலாநிதி எச்.டி.விஜேசேக்கர	சிரேட்ட விரிவுரையாளர், ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனம்
4.	திருமதி எம்.ஐ.ஜான்ஸ்	சிரேட்ட விரிவுரையாளர், ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனம்
12.(1)(ஈ) நிறுவனத்தின் மாணவர்களினால் நியமிக்கப்படும் மாணவர்		
5.	திருமதி ஆர்.ரீ.சுரேந்திரராஜ்	இரண்டாம் மொழியாக ஆங்கிலம் கற்பித்தல்
6.	திருமதி ஜே.ரணசிங்க	மாணவர் பிரதிநிதி
12.(1)(உ) நிறுவன பதவியணி உறுப்பினர்கள் அல்லாத நிறுவனத்திற்குரிய கல்வி துறைகளில் நிபுணத்துவம் பெற்றவர்களிலிருந்து உரிய கல்விச் சபையினால் நியமிக்கப்படும் உறுப்பினர்கள் மூவர்		
7.	திருமதி எல்.கே.குமாரணதுங்க	வெளிவாரி விரிவுரையாளர், இரண்டாம் மொழியாக ஆங்கிலமொழி பற்றிய முதுமாணி பட்டம், இலங்கை திறந்த பல்கலைக்கழகம் (உறுப்பினர்)
8.	கலாநிதி ரொமொலா ரசூல் (2022-01-01-2022-02-28) வெற்றிடம் (2022-03-01 ஆம் திகதி தொடக்கம்)	சிரேட்ட விரிவுரையாளர், ஆங்கிலமொழி கற்பித்தல் பிரிவு, களனி பல்கலைக்கழகம்
12.(1)(உ) ஆணைக்குழுவின் ஆங்கிலமொழி கற்பித்தல் பற்றிய நிலையியற் குழுவினால் தெரிவு செய்யப்பட்ட சபையின் விடயநோக்கெல்லையின் கீழுள்ள பாடநெறிகளை கற்பிப்பவர்கள் இருவர்		
9.	கலாநிதி பி.எம்.கே.பெரேரா	சிரேட்ட விரிவுரையாளர், ஆங்கில மொழிக் கல்விப் பிரிவு, கொழும்பு பல்கலைக்கழகம்
10	கலாநிதி என்.கே.அபேசேக்கர	தலைவர், மொழிக் கல்விப் பிரிவு, இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
12.(1)(ஊ) ஆணைக்குழுவின் ஆங்கிலமொழி கற்பித்தல் பற்றிய நிலையியற் குழுவினால் தெரிவு செய்யப்பட்ட மேற்குறிப்பிட்ட எந்தவொரு வகுதியையும் சாராத விரிவுரையாளர்கள் இருவர்		
11.	கலாநிதி வீ.வீ.மெதவத்தேகெதர	சிரேட்ட விரிவுரையாளர், மொழிக் கல்விப் பிரிவு, இலங்கை திறந்த பல்கலைக்கழகம் (2021-04-01 ஆம் திகதி முதல்)
12.	திருமதி பி.நாணயக்கார	முன்னாள் இரு மொழிக்கல்வி பணிப்பளார், கல்வி அமைச்சு (2021-04-01 ஆம் திகதி முதல்)

(iii) **இரண்டாம் மொழி சூழ்நிலையில் இலக்கியம் கற்பிப்பதற்கான ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் கல்விசார் பதவியணி உறுப்பினர்கள்**

	பெயர்	பதவி
12.(1)(அ) தலைவராக பணிப்பாளர்		
1.	பேராசிரியர் எச்.எஸ்.ரம்புக்வெல்ல (2022-01-01-2022-02-28) கலாநிதி ரொமொலா ரசூல் (2022-03-01-2022-12-31)	தலைவர் / பணிப்பாளர், ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனம்
12.(1)(ஆ) தகவல் தொழினுட்பத்திற்குரிய புத்தகங்கள் மற்றும் வேறு ஊடக வளங்கள் உள்ளடக்கப்பட்ட நிறுவனத்தின் கற்பித்தல் பொறுப்பாளர்		
2.	திருமதி ஆர்.அமரசேக்கர (2022-01-01-2022-10-31) கலாநிதி ஐ.எம்.நவரத்ன (2022-11-01-2022-12-31)	பதில் நூலகர், இலங்கை பல்கலைக்கழகம்
12.(1)(இ) உரிய சபைக்கு அல்லது நிறுவனத்திற்கு கல்விசார் பதவியணியினால் நிர்ணயிக்கப்படும் கல்வி சபையின் நிரந்தர ஆசிரியர்கள்		
3.	கலாநிதி எச்.டி.விஜேசேக்கர	சிரேட்ட விரிவுரையாளர், ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனம்
4.	திருமதி எம்.ஐ.ஜான்ஸ்	சிரேட்ட விரிவுரையாளர், ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனம்
12.(1)(ஈ) நிறுவனத்தின் மாணவர்களினால் நியமிக்கப்படும் இரண்டு மாணவர்கள்		
5.	திரு.ஜே.பெரேரா	மாணவப் பிரதிநிதி
6.	திரு.பி.ஹேமசிங்க	மாணவப் பிரதிநிதி
12.(1)(உ) நிறுவன பதவியணி உறுப்பினர்கள் அல்லாத நிறுவனத்திற்குரிய கல்வி துறைகளில் நிபுணத்துவம் பெற்றவர்களிலிருந்து உரிய கல்விச் சபையினால் நியமிக்கப்படும் உறுப்பினர்கள் இருவர்		
7.	கலாநிதி டி.ஈ.தேவேந்திர	சிரேட்ட விரிவுரையாளர் மொழிக் கல்விப் பிரிவு, இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
8.	கலாநிதி எச்.வி.எம்.ரத்வத்தே	சிரேட்ட விரிவுரையாளர் மொழிக் கல்விப் பிரிவு, இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
12.(1)(ஊ) ஆணைக்குழுவின் ஆங்கிலமொழி கற்பித்தல் பற்றிய நிலையியற் குழுவினால் தெரிவு செய்யப்பட்ட சபையின் விடயநோக்கெல்லையின் கீழுள்ள பாடநெறிகளை கற்பிப்பவர்கள் இருவர்		
09.	கலாநிதி பி.மனுரத்ன	தலைவர், ஆங்கிலமொழி கல்விப் பிரிவு, களினி பல்கலைக்கழகம்
10.	வெற்றிடம்	

12.(1)(எ) ஆணைக்குழுவின் ஆங்கிலமொழி கற்பித்தல் பற்றிய நிலையியற் குழுவினால் தெரிவு செய்யப்பட்ட மேற்போந்த வகுப்பீடுகளின் கீழ் எடுக்கப்படாத ஆசிரியர்கள் இருவர்		
11.	கலாநிதி ஆர்.எம்.சீ.ஜயத்திலக்க	தலைவர், ஆங்கிலமொழிக் கல்விப் பிரிவு, ஸ்ரீ ஜயவர்தன பல்கலைக்கழகம்
12.	வெற்றிடம்	

(iv) **ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் பதவியணி உறுப்பினர்கள்**

நிரந்தர பதவியணி உறுப்பினர்களின் பெயர்கள்

	பெயர்	**பதவிப் பெயர்**
1	பேராசிரியர் எச்.எஸ்.ரம்புக்வெல்ல PhD (ஹொங்கொங்) (2022-01-01-2022-02-28) கலாநிதி ரொமொலா ரசூல் PhD (அவுஸ்திரேலியா) (2022-03-01-2022-12-31)	பணிப்பாளர்
2	திருமதி எச்.டி.விஜேசேக்கர PhD (QUT, அவுஸ்திரேலியா)	சிரேட்ட விரிவுரையாளர்
3	திருமதி எம்.ஐ.ஜான்ஸ் MA in TESL (PGIE/OUSL), MPhil (களனி)	சிரேட்ட விரிவுரையாளர்
4	திரு.டபிள்யு.டி.ரீ.திலகரத்ன BSc (இலங்கை திறந்த பல்கலைக்கழகம்)	சிரேட்ட உதவிப் பதிவாளர்
5	திருமதி.எஸ்.சி.முனசிங்க BSc in Business Administration (ஸ்ரீ ஜயவர்தனபுர)	உதவி நிதி பொறுப்பாளர்
6	திருமதி.ஜி.பி.ஐ.டி.சிறிவர்தன	முகாமைத்துவ உதவியாளர்
7.	திரு.எச்.என்.என். பெரேரா	முகாமைத்துவ உதவியாளர்
8.	திருமதி ஏ.ஆர்.எஸ்.கே.ராஜபக்ஷ	முகாமைத்துவ உதவியாளர் - கணக்கு பதியுநர்
9	திருமதி ஏ.ஜீ.ஆர்.எம்.டி.கே.ரணவீர	முகாமைத்துவ உதவியாளர்
10	திரு.டபிள்யு.எம்.டி.ஆர்.பீ.வீரசிங்க	தொழிலாளர்
11	திரு.ஆர்.யு.ஜயசிங்க	அலுவலக உதவியாளர்

சேவை வகுப்பீடு

சேவை வகுதி	சம்பள குறியீடு	அங்கீகரிக்கப்பட்ட பதவியணி	2022-12-31 ஆம் திகதியன்றுக்கு உண்மையான பதவியணி	2022-12-31 ஆம் திகதியன்றுக்கான வெற்றிடம்
ஆரம்ப மட்டம்				
ஆரம்ப தரம் - பயிற்சி பெறாத	PL - 1	2	1	1
இரண்டாம் நிலை மட்டம்				
முகாமைத்துவ உதவியாளர் - தேர்ச்சி பெறாத	U - MN 1	5	4	1
மூன்றாம் நிலை மட்டம்				
கணிஷ்ட நிறைவேற்றுத் தரம் / முகாமையாளர்கள்	U - EX 1	1	1	
சிரேட்ட மட்டம்				
மத்திய மட்டம் நிறைவேற்றுத் தரம்	U - EX 2	1	1	
விரிவுரையாளர்கள்	U - AC 3	3	2	1
பேராசிரியர் / சிரேட்ட விரிவுரையாளர்	U - AC 5	2	2	
மொத்தம்		14	11	3

ஒப்பந்த பதவியணி உறுப்பினர்களின் பெயர்கள்

	பெயர்	பதவிப் பெயர்
1.	கலாநிதி அக்ரா ராஜபக்ஷ Phd (Arizona State University)	சிரேட்ட விரிவுரையாளர்
2.	திருமதி எஸ்.சென்விரத்ன MA (லண்டன் பல்கலைக்கழக கல்லூரி, ஐக்கிய இராச்சியம்)	விரிவுரையாளர்
3.	திருமதி எம்.டி.விஜேகுணவர்தன MA (Giessen பல்கலைக்கழகம், ஜேர்மன்)	விரிவுரையாளர்
4.	திருமதி எஸ்.எல்.ரணசிங்க BSc. (பேராதனை)	கல்விசார் ஒருங்கிணைப்பாளர்
5.	திரு.ஏ.என்.எஸ்.சில்வா BTEC (இலங்கை திறந்த பல்கலைக்கழகம்)	கல்விசார் ஒருங்கிணைப்பாளர்
6.	திரு.எஸ்.எஸ்.எதிரிசிங்க BA (இலங்கை திறந்த பல்கலைக்கழகம்)	கருத்திட்ட உதவியாளர்
7	திருமதி யூ.எம்.கன்கானம்கே BSc (ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்)	கருத்திட்ட உதவியாளர்

2. **பணிப்பாளரின் மீளாய்வு**

(**அ**) **சுருக்க அறிமுகம்**

ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனம் (பொதுவாக நாடும்) COVID - 19 தொற்று தாக்கத்தின் மத்தியில் அதன் பணிகளை வழமையான நிலைமைக்கு கொண்டுவருவதற்கு முயற்சி எடுத்து வரும் சந்தர்ப்பத்தில், நாடானது 2022 ஆம் ஆண்டில் எதிர்பாராத அரசியல், சமூக மற்றும் பொருளாதார ரீதியில் நிலையற்றத் தன்மைக்கு முகங்கொடுத்தது. இது நிறுவனமென்ற வகையில் ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனத்திற்கு பேரின மற்றும் நுண் செயற்பாடுகள் ஆகிய இரண்டு துறைகளும் சவால் மிக்கதானது. பொதுவாக அரசாங்கத்துறை மற்றும் தனியார் துறை ஆகிய இரு துறைகளுக்கும் இதன் மூலம் தாக்கம் ஏற்பட்டதோடு, நாட்டில் நிலவிய நிலையற்றத் தன்மை மற்றும் போராட்டம் காரணமாக வழமையான கடமைகளுக்கும் தாக்கம் ஏற்பட்டது. அத்துடன் பொருளாதார பின்னடைவு மாணவர்களின்பால் நேரடியாக தாக்கம் செலுத்தியது. மின் துண்டிப்பு மற்றும் எரிபொருள் பற்றாக்குறை காரணமாக நிறுவனத்திற்கும் சவால்களுக்கு முகங்கொடுக்க வேண்டி ஏற்பட்டது.

ஆயினும், பெரும்பாலான சவால்களுக்கு வெற்றிகரமாக முகங்கொடுப்பதற்கு ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனம் செயல் ஊக்கத்துடன் அணுகியதோடு, 2022 ஆம் ஆண்டில் பிரதான நான்கு நிகழ்ச்சித்திட்டங்கள் சார்பில் தேர்ந்தெடுப்பதற்கான பரீட்சைகள் அறிவித்தல் மூலம் பிரசுரிக்கப்பட்டு குறித்த நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டன. அதன் பின்னர், இரண்டாம் மொழியாக ஆங்கில மொழி கற்பித்தல் தொடர்பிலான கலைமானி பட்ட நிகழ்ச்சித்திட்டம் மற்றும் இரண்டாம் மொழி சூழ்நிலையில் இலக்கியம் கற்பித்தல் தொடர்பிலான கலைமானி பட்ட நிகழ்ச்சித்திட்டம் ஆகிய கலைமானி பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் சார்பிலும் ஆங்கிலமொழியை தொழில் ரீதியில் பயன்படுத்துதல் பற்றிய பட்டப்பின் படிப்பு டிப்ளோமா சார்பிலும் மாணவர்கள் ஆட்சேர்ப்பு செய்யப்படடனர். இந்த மாணவர்கள் 2022 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட இந்த பாடநெறிகளை வெற்றிகரமாக கற்றனர். ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனத்தினால் இரண்டாம் மொழி கல்வி பற்றிய பட்டப்பின் படிப்பு டிப்ளோமா பாடநெறியின் மூன்றாவது குழு சார்பில் மாணவர்களை ஆட்சேர்ப்பு செய்யும் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதோடு, குறித்த இந்த நிகழ்ச்சித்திட்டத்திற்கு தெரிவு செய்யப்பட்டுள்ள 40 மாணவர்களுக்கு கல்வி அமைச்சினால் நிதி விடுவிக்கப்பட வேண்டியுள்ளது.

ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனம் தொற்று நோய் தாக்கத்தை குறைப்பதற்கு ஈட்டிய பூர்வாங்க வெற்றியின் காரணமாக அதனை 2022 ஆம் ஆண்டிலும் அவ்வாறே பேணுவதற்கு இயலுமானது. ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனத்தினால் இரண்டாம் மொழியாக ஆங்கில மொழி கற்பித்தல் தொடர்பிலான கலைமானி பட்ட நிகழ்ச்சித்திட்டத்தின் இரண்டாம் குழு சார்பில் அண்ணளவாக 100 மாணவர்கள் பதிவு செய்யப்பட்டதோடு, ஏனைய நிகழ்ச்சித்திட்டங்கள் சார்பிலும் அண்ணளவாக அதற்கு முன்னைய ஆண்டுகளில் பதிவு செய்யப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கைக்கு சமமான எண்ணிக்கையினரை பதிவு செய்து கொள்வதற்கு இயலுமானது. பொதுவாக தொற்று நோய் நாட்டின் பொருளாதாரத்திற்கு பாதகமான தாக்கங்களை ஏற்படுத்திய பின்னணியில் இது குறிப்பிடத்தக்க வெற்றியாகும். ஆயினும் இரண்டாம் மொழியாக ஆங்கில மொழி கற்பித்தல் தொடர்பிலான கலைமானி பட்ட நிகழ்ச்சித்திட்டத்தை மிக நிலைபேறான அடிப்படையில் பேணுவதற்கு இந்த நிகழ்ச்சித்திட்டம் சார்பில் பதிவு செய்து கொள்ளும் மாணவர்களின் எண்ணிக்கையைக் குறைப்பதற்கு ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனத்தினால் திறமுறை ரீதியில் தீர்மானிக்கப்பட்டது. அரசாங்க வருமானம் குறைவடைந்தமையினால் இரண்டாம் மொழி பட்டப்பின் படிப்பு நிகழ்ச்சித்திட்டம் சார்பில் நிதி வழங்கும் கல்வி அமைச்சுக்கு போதுமான வரவுசெலவுத்திட்ட நிதி ஏற்பாடுகள் 2021 ஆம் ஆண்டில் கிடைக்காததன் காரணமாக இந்தப் பாடநெறியின் மூன்றாம் குழுவுக்கான பதிவு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு இயலாமற்போனது. ஆயினும், 2022 ஆம் ஆண்டு சார்பில் இந்த நிகழ்ச்சித்திட்டத்திற்கான மூன்றாவது குழுவை பதிவு

செய்வதற்கு ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனம் எதிர்பார்ப்பதோடு, கல்வி அமைச்சின் ஊடாக அனுப்பப்படாத தனியார் துறை விண்ணப்பதாரரை பதிவு செய்தல் உட்பட இந்த நோக்கத்திற்கு மாற்று வழிமுறைகள் தொடர்பில் நிறுவனமானது தற்போது ஆராய்ந்து வருகின்றது.

2020 ஆம் 2021 ஆம் ஆண்டுகளில் நடைமுறைப்படுத்தப்பட்ட இணையவழி முறையானது 2022 ஆம் ஆண்டிலும் நிறுவனத்திற்கு பாரிய சேவையை வழங்கியது. இணையவழி ஊடாக கற்பிக்கும் முறை மற்றும் மதிப்பிடும் முறை பொதுவாக பல்கலைக்கழக முறைமையினுள் அங்கீகரிக்கப்பட்ட முதன்மை வழிமுறையாகையினால், பொருளாதார பின்னடைவு காரணமாக மேற்கொள்ளப்பட்ட நாட்டினை முடக்குதல் மற்றும் பொது இடையூறான நிலைமைகள் மத்தியில் ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனம் அதன் பணிகளை பயனுள்ள வகையில் நடாத்திச் செல்வதற்கு முடியுமானது. கல்விசார் பதவியணி உறுப்பினர் ஒருவர் விலகியதன் காரணமாக ஏற்பட்ட வெற்றிடத்தை நிரப்புவதற்கு நிறுவனமானது நடவடிக்கை எடுத்து வருகின்றது. இந்தப் பதவி சார்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றதோடு, இதன் காரணமாக உருவாகும் அவசர மனிதவள பற்றாக்குறை தவிர்ப்பதற்கு ஒப்பந்த அடிப்படையில் கல்விசார் பதவியணி உறுப்பினர் ஒருவர் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டார். நாடென்ற ரீதியில் இலங்கை கடந்துவரும் பிரச்சினைகள் யாவும் நிறுவனத்தின் எதிர்காலம் தொடர்பிலான தொலைநோக்கிற்கு சவால்மிக்கதாகும். ஆயினும், தொற்றுநிலமை கடுமையாக பரவிய இரண்டு வருட காலத்தில் நிறுவனம் செயலாற்றிய விதம் எதிர்பாரா மற்றும் சவால்மிக்க சூழ்நிலைகளில் அவற்றுக்கு முகங்கொடுக்கும் ஆற்றல் நிறுவனத்திற்கு உள்ளதென்பதை எடுத்துக் காட்டுகின்றது.

மீளாய்வு ஆண்டில் மாணவர்களின் எண்ணிக்கையும் நிதி தகவல்களும் பின்வருமாறாகும் -

ஒவ்வொரு பாடநெறி சார்பிலும் பதிவுச்செய்யப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை (**முதுமானி பட்டம்**, **பட்டப்பின் படிப்பு டிப்ளோமா**)

வருடம்	இரண்டாம் மொழியாக ஆங்கில மொழி கற்பித்தல் - பட்டப்பின் படிப்பு டிப்ளோமா, முதுமானி பட்டம்	இரண்டாம் மொழி சூழ்நிலையில் இலக்கியம் கற்பித்தல் - முதுமானி பட்டம்	இரண்டாம் மொழி பற்றிய பட்டப்பின் படிப்பு டிப்ளோமா	ஆங்கில மொழியினை தொழில் ரீதியில் பயன்படுத்துதல் - பட்டப்பின் படிப்பு டிப்ளோமா	தத்துவ மானி	குறுகிய கால பாடநெறி	மொத்தம்
2015 (2014/15)	140	14	-	-	-	64	218
2016 (2015/16)	155	19	-	-	-	189	363
2017 (2016/17)	176	45	-	-	-	169	390
2018 (2017/18)	191	56	-	-	-	60	307
2019 (2018/19)	193	64	40	-	-	27	391
2019 / 20	203	75	50	67	-	45	430
2020/21	285	107	84	45	-	50	568
2021/22 (2021-12-31 ஆம் திகதியன்றுக்கு)	328	121	52	39	3	-	543

2022/23 (2022-12-31 ஆம் திகதியன்றுக்கு)	282	113	52	45	2	-	494

மாணவர்களின் பெறுபேறு

வருடம்	TESL			TLSC		PPE PGDip	BE PGDip	மொத்தம்
	PGDip	MTESL	MA	PGDip	MA			
2018 (2017/18)	2	-	12	-	2	-	-	16
2019 (2018/19)	7	-	17	1	1	-	-	26
2020 (2019/20)	8	-	6	1	3	41	-	59
2021(2020/21)	16	-	7	2	-	33	29	87
2022(2021/22)	13	12	15	19	-	25	37	121

(**ஆ**) 2022 **ஆம் ஆண்டின் முக்கிய நிகழ்வுகள்**

இந்தப் பகுதியின் கீழ் மீளாய்வுக்கு உட்பட்ட ஆண்டினுள் ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனமானது நிறுவன ரீதியாக அடைந்துள்ள முக்கிய நிகழ்வுகள் பற்றி சுருக்கமாக குறிப்பிடப்படுகின்றது. ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் செயலாற்றுகை தொடர்பிலான மேலதிக விரிவான தரவுகள் இந்த ஆண்டறிக்கையின் ஏனைய பகுதிகளில் குறிப்பிடப்பட்டுள்ளன.

* நிறுவனத்தின் சகல நிகழ்ச்சித்திட்டங்களுக்கும் பரந்துபட்ட Google வகுப்பறை முறையொன்று அபிவிருத்தி செய்யப்பட்டது. 2022 ஆம் ஆண்டில் ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனம் இந்த வகுப்பறை முறையை மேலும் விருத்தி செய்ததோடு, தேவையான வசதிகள் மேலும் அதிகரிக்கப்பட்டன. அத்துடன் செயற்பாட்டு திறன்களும் அதிகரிக்கப்பட்டன. இந்த முறையுடன் ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனத்தில் தற்போது கல்வி கற்கும் மற்றும் புதிய மாணவர்களுக்கு 'ousl.lk' களம் உடன் அவர்களுக்கே விசேடமான மின்னஞ்சல் முகவரியொன்று வழங்கப்படும். கலந்துரையாடல்கள், பலவித கேள்விகள், சுருக்க விடைக்களுக்கான கேள்விகள், ஆய்வு, jamboards போன்ற பல்வகை மதிப்பீட்டு முறைகளுக்கு மேலதிகமாக உயர்மட்ட கற்புல செவிப்புல மற்றும் அச்சு உள்ளடக்கங்களை இந்த வகுப்பறை கொண்டுள்ளது.

* அதன் கல்வி நடவடிக்கையினை ஆரம்பிப்பதற்கு ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனத்தினால் Zoom இணையவழிமுறை பயன்படுத்தப்பட்டது. வெளிநாடுகளிலுள்ள மாணவர்கள், தூர இடங்களிலுள்ள மாணவர்கள் அதேபோன்று வெளிநாடுகளில் வசிக்கும் பரீட்சகர்கள் மற்றும் ஆய்வுக் கட்டுரை மேற்பார்வையாளர்கள் சார்பில் வாய்மொழிமூல பரீட்சைகள், மாணவர்களின் முன்வைப்புகள் மற்றும் சில விசேட பரீட்சைகளை நடாத்துவதற்கு ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனத்திற்கு இந்த முறைமையானது வசதியாக அமைந்தது. கூட்டத்திற்கு தனிப்பட்ட முறையில் கலந்துகொள்ள முடியாத வேலைபளு மிக்க வெளிவாரி தரப்பினர்களுக்கு இணையவழிமுறை ஊடாக கூட்டத்தில் கலந்துகொள்வதற்கு அதன் முகாமைத்துவ சபைக்கும் கல்வி சபைக்கும் வசதிகள் ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனத்தினால் வழங்கப்பட்டது. இது 2022 ஆம் ஆண்டில் பயண கட்டுப்பாடு, ஊரடங்கு, வேலை நிறுத்தம் மற்றும் ஏனைய பிரச்சினைகளின் மத்தியில் கூட்டங்களுக்கான பங்களிப்பு அதிகரிப்பதற்கு காரணமாய் அமைந்தது.

* 2022 ஆம் ஆண்டின் இறுதிப் பந்தியில் ஆங்கில பட்டப்பின் படிப்பு

நிறுவனத்தினால் "R & R – ஆராய்ச்சி மற்றும் பிரதிபலிப்பு" என்னும் பெயரில் மிக வெற்றிகரமான ஆராய்ச்சி தொடறொன்று அறிமுகப்படுத்தப்பட்டது. கலாநிதி ஆக்ரா ராஜபக்ஷ, திருமதி.டினாலி பெர்னாண்டோ மற்றும் கலாநிதி சசிகலா எஸ்சல்ல ஆகியோர் வளவாளர்களாக பங்களிப்பு நல்கி செப்ரெம்பர் மாத்திலிருந்து நவெம்பர் மாதம் வரை மூன்று கூட்டத் தொடர்கள் நடாத்தப்பட்டன. இந்த கூட்டத் தொடர்கள் இரு முறைகளில் நடாத்தப்பட்டதோடு, ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் தற்போதைய மற்றும் பழைய மாணவர்கள் ஏனைய பல்கலைக்கழக சகாக்கள் இதில் கலந்து கொண்டனர். இந்தக் கூட்டத் தொடரின் நோக்கமாவது இலங்கையில் ஆங்கில மொழி மற்றும் இலக்கியத்தை கற்பித்தலுக்குரிய பல்வேறு துறைகளில் சம கால ஆராய்ச்சி போக்கு தொடர்பில் ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் மாணவர்களுக்கு அறிமுகப்படுத்துவதாகும்.





"ஆராய்ச்சி மற்றும் பிரதிபலிப்பு"

ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் பெரும்பாலானோர் தொழில் புரியும் வயது வந்தவர்கள் ஆகையினால் இணையவழி ஊடாக வழங்கப்பட்டுள்ள நெகிழ்ச்சி தன்மை மாணவர்களின் பங்களிப்பினை சிறப்பான விதத்தில் அதிகரிக்கச் செய்துள்ளது. நேரடி விரிவுரைகளின் பின்னர் பதிவேற்றம் செய்யப்படும் வீடியோ பதிவுகளை பெற்றுக் கொள்ள முடியுமாவது மாணவர்களுக்கு மிகவும் வசியதாக மாறியுள்ளது

நிகழ்ச்சித்திட்டங்களை ஆரம்பித்தல்

* 2022 ஆகஸ்ட் மாதம் 14 ஆம் திகதி ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனத்தினால் ஆங்கில மொழியினை தொழில் ரீதியில் பயன்படுத்துதல் பற்றிய பட்டப்பின் படிப்பு டிப்ளோமா சார்பில் தேர்ந்தெடுப்பதற்கான பரீட்சை நடாத்தப்பட்டது. இந்த தேர்ந்தெடுப்பதற்கான பரீட்சைக்கு 73 மாணவர்கள் தோற்றியதோடு, இணையவழி 'புரக்டரீன்' முறை பயன்படுத்தப்பட்டது. மாணவர்களுக்கு பரிட்சயம் ஏற்படுவதற்காக முற்பரிசோதனை பயிற்சி அமர்வொன்றும் நடாத்தப்பட்டது. மாணவர்களின் பங்குபற்றுதலின்றி இந்த முழு செயற்பாடும் செயற்படுத்தப்பட்டது. Google Form பயன்படுத்தி விண்ணப்பங்கள் பெற்றுக் கொள்ளப்பட்டதோடு, இணையவழி ஒளித்தோற்ற நேர்முக பரீட்சையின் ஊடாக Google வகுப்பறையினைப் பயன்படுத்தி நடாத்தப்பட்ட இணையவழி பரீட்சைக்கு மாணவர்கள் தோற்றினர். அதன் பின்னர், மாணவர்கள் சார்பில் இணையவழி ஆரம்ப விழாவொன்றும் கற்றல் நெகிழ்ச்சிகரமான நிகழ்ச்சித்திட்டமொன்றும் நடாத்தப்பட்டது. 2022 செப்ரெம்பர் மாதம் 29 ஆம் திகதி இணையவழி

மாணவர் ஆலோசனையுடன் மாணவர்களுக்கான பதிவும் மேற்கொள்ளப்பட்டது. 44 மாணவர்கள் நிகழ்ச்சித்திட்டத்திற்காக பதிவு செய்து கொள்ளப்பட்டனர்.

* ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் மீளமைக்கப்பட்ட இரண்டாம் மொழியாக ஆங்கில மொழி கற்பித்தல் தொடர்பிலான முதுமானி பட்ட நிகழ்ச்சித்திட்டத்தின் மூன்றாம் குழுவினை தெரிவு செய்வதற்கான பரீட்சை 2022 ஆகஸ்ட் மாதம் 06 ஆம் திகதி நடாத்தப்பட்டது. 176 விண்ணப்பங்கள் கிடைக்கப் பெற்றதோடு, திறந்த பல்கலைக்கழகத்தின் பரீட்சை மண்டபத்தில் நடாத்தப்பட்ட தெரிவு செய்யும் பரீட்சைக்கு அவர்கள் தோற்றியதோடு ஆரம்ப மற்றும் பதிவு செய்யும் நிகழ்ச்சித்திட்டம் ஒக்றோபர் 14 ஆம் திகதியன்று நடாத்தப்பட்டது. 2022/2023 குழு சார்பில் 60 மாணவர்கள் பதிவு செய்யப்பட்டனர்.




இரண்டாம் மொழியாக ஆங்கில மொழி கற்பித்தல் தொடர்பிலான முதுமானி பட்ட நிகழ்ச்சித்திட்டத்தின் ஆரம்ப மற்றும் பதிவு செய்யும் நிகழ்ச்சித்திட்டம்

* இரண்டாம் மொழியாக ஆங்கில மொழி கற்பித்தல் தொடர்பிலான முதுமானி பட்ட நிகழ்ச்சித்திட்டம் சார்பில் பதிவு செய்தலானது 2022 நவெம்பர் 17 ஆம் திகதியன்று நடாத்தப்பட்டது. 2021 யூலை தொடக்கம் ஆகஸ்ட் வரை விண்ணப்பங்கள் கோரப்பட்டதோடு, 45 விண்ணப்பதாரர்கள் தெரிவு செய்யும் பரீட்சையில் சித்தியடைந்தனர். மாணவர்களை பதிவு செய்தல் மற்றும் அறிமுக நிகழ்ச்சித்திட்டம் 2022 நவெம்பர் மாதம் 17 ஆம் திகதி நடாத்தப்பட்டதோடு, 23 மாணவர்கள் பதிவு செய்யப்பட்டனர்.

இதற்கு மேலதிகமாக ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனத்தினால் மீளாய்வு ஆண்டின் கல்வி மற்றும் நிர்வாக நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன.

பொதுவான கல்வி நடவடிக்கைகள்

* ஆண்டினுள் 07 MA Viva - Voce பரீட்சைகள் நடாத்தப்பட்டன. நாட்டின் அப்போதைய நிலமை காரணமாக Viva - Voce பரீட்சைகள் சில இணையவழி ஊடாக நடாத்தப்பட்டதோடு, சிலர் வெளிநாடுகளிலிருந்தும் தோற்றினர்.

* 2022 சனவாரி மாதம் 05 ஆம் திகதி நடாத்தப்பட்ட பட்டமளிப்பு விழாவில் (2020 - II) 59 மாணவர்கள் பட்டங்களைப் பெற்றனர்.

* 2022 செப்ரெம்பர் மாதம் 13 ஆம் திகதி நடாத்தப்பட்ட பட்டமளிப்பு விழாவில் (2021 - II) 87 மாணவர்கள் பட்டங்களைப் பெற்றனர். இதுவரை ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனத்தில் பட்டம் பெற்ற ஆகக்கூடிய எண்ணிக்கை இதுவாகும். ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்ட 04 நிகழ்ச்சித்திட்டங்களுக்கும் உரிய மாணவர்கள் இதில் உள்ளடங்குவர்.

நிர்வாக நடவடிக்கைகளும் ஆரம்பங்களும்

COVID - 19 தொற்று காரணமாக விதிக்கப்பட்ட சுகாதார வழிகாட்டல்கள் தளர்த்தப்பட்டவுடன் 2022 ஆம் ஆண்டு ஆரம்பமானது. 2022 சனவரி மாதம் 03 ஆம் திகதியிலிருந்து ஊழியர்கள் அனைவரும் சேவைக்கு சமூகமளிப்பது கட்டாயமானதாகும். ஆயினும், 2022 மார்ச் மாதத்திலிருந்து நீடிக்கப்பட்ட மின் துண்டிப்பு, எரிபொருள் பற்றாக்குறை காரணமாக இதற்கு கணிசமான தாக்கத்தினை செலுத்தியது. இதன் விளைவாக உருவான போக்குவரத்து பிரச்சினைகள் காரணமாக மீண்டும் வீட்டிலிருந்து வேலை செய்யும் நடவடிக்கை முறைக்கு மாற வேண்டிய நிலை எழுந்தது. இந்தக் காலப்பகுதியில் ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனம் விரிவுரையாளர்கள் மற்றும் மாணவர்களுக்கு உதவிச் சேவை வழங்கியதோடு, சபை கூட்டங்கள் போன்ற அத்தியாவசிய கூட்டங்கள் இணையவழி ஊடாக நடாத்தப்பட்டன. மூன்று நிகழ்ச்சித்திட்டங்கள் சார்பில் விண்ணப்பங்கள் தயாரிக்கப்பட்டதோடு, இரண்டு முறைகளையும் பயன்படுத்தி நிகழ்ச்சித்திட்டத்திற்கு தகைமையுடைய மாணவர்களை தெரிவு செய்யும் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டன. வீட்டிலிருந்து வேலைசெய்யும் வழிகாட்டல்களைத் தயாரிக்கும் பணிகளுக்கு இணையவழி ஊடான பதவியணி கூட்டங்கள் வாராந்தம் நடாத்தப்பட்டன.

2021 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கையுடன் 2021 ஆம் ஆணடிற்கான நிதி அறிக்கையும் பெப்ரவரி மாதம் 28 ஆம் திகதி கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டது. 2022 ஆம் ஆண்டிற்கான திருத்தங்களும் பூர்த்தி செய்யப்பட்டன. 2021 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கை 2022 ஆகஸ்ட் மாதம் 23 ஆம் திகதியன்று பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.
சிரேட்ட விரிவுரையாளர் ஒருவர் ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டது நிரந்தர பதவியணிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதில் அரசாங்கத்தினால் விதிக்கப்படுள்ள வரையறைகள் காரணமாக நிரந்தர விரிவுரையாளர் ஒருவரை ஆட்சேர்ப்புச் செய்யமுடியாத காரணத்தினாலாகும். வெற்றிடம் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட 7 வருடங்களுக்கு ஒருமுறை வழங்கப்படும் லீவு வழங்கப்பட்டமை காரணமாக மொத்த கல்விசார் பதவியணியில் 50 சதவீதம் குறைவடைந்தமையினால் இதனை செய்யவேண்டிய நிலை ஏற்பட்டது. நிரந்தர கல்விசார் பதவியணி உறுப்பினர் ஒருவரின் கோரிக்கையின் பேரில் இடமாற்றம் வழங்கப்பட்டது. ஆயினும், ஆட்சேர்ப்பு வரையறை காரணமாக இந்த நிரந்தர முகாமைத்துவ உதவியாளர் பதவி வெற்றிடம் நிலவுகின்றது. அத்துடன் மேலும் நிரந்தர பதவியணியில் வெற்றிடத்தை உருவாக்கி அலுவலக உதவியாளர் ஒருவர் வேறு பல்கலைக்கழகத்தில் பதவியொன்றுக்கு பதவியுயர்த்தப்பட்டுள்ளார்.

2022-02-28 ஆம் திகதியன்றுக்கு முன்னர் பணிப்பாளரின் பதவிக்காலம் முடிவுற்றமையினால் கலாநிதி (திருமதி) ரொமொலா ரசூல் ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் புதிய பணிப்பாளராக 2022-03-01 ஆம் திகதி தொடக்கம் செயல்வலுவுக்கு வரத்தக்கதாக கடமைகளைப் பொறுப்பேற்றார்.

ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் முகாமைத்துவ சபை 2022 ஆம் ஆண்டில் 11 தடவைகள் கூடியது. Zoom தொழினுட்பத்தின் ஊடாக உறுப்பினர்களுக்கு இணைவதற்கு வசதிகள் செய்யப்பட்டன. குறித்த ஆண்டில் காலப்பகுதிகளில் நாடு முகங்கொடுக்க நேரிட்ட பல்வேறுபட்ட பிரச்சினைகள் மத்தியில் ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனம் சகல உறுப்பினர்களினதும் கருத்துக்களையும் அவதானிப்புரைகளையும் ஆலோசனைகளையும் பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்பு கிடைக்கப்பெற்றது.

இரண்டாம் மொழியாக ஆங்கிலம் கற்பித்தல் / இரண்டாம் மொழிக் கல்விக்கான கல்விச் சபை மற்றும் இரண்டாம் மொழி சூழ்நிலையில் இலக்கியம் கற்பித்தல் / ஆங்கில மொழி தொழில் ரீதியில் கையாளுதல் என்பவற்றுக்கான 9 கல்விச் சபைக் கூட்டங்கள் நடாத்தப்பட்டன.

சுய வழிமுறை அல்லது கணனிமயப்படுத்தப்பட்ட செயல்முறை ஊடாக செய்யக்கூடிய மாணவர் சேவை மற்றும் நிர்வாக பணிகள் இதுவரை பேரேடு

வடிவில் பேணப்படுகின்றமையினாலும், இதற்கு அதிக காலத்தை எடுக்கின்றமையினாலும் ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனத்திற்கு முகாமைத்துவ தகவல் முறைமையொன்றை அறிமுகப்படுத்துவதற்கு உத்தியோகபூர்வ கலந்துரையாடல்கள் ஆரம்பிக்கப்பட்டன. ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனத்திற்கான முகாமைத்துவ தகவல் முறைமை திறந்த பல்கலைக்கழகத்தின் தகவல் தொழிநுட்ப முறைமையுடன் இணைக்கும் பொருட்டு துணைவேந்தர் ஊடாக திறந்த பல்கலைக்கழகத்தின் உதவி இதன் பொருட்டு பெற்றுக் கொள்வதற்கு ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் முகாமைத்துவ சபையின் அங்கீகாரத்துடன் ஆரம்ப கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டன.

நிதி

ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனம் 2022 ஆம் ஆண்டில் 17,750,951/- ரூபாவைக் கொண்ட மேலதிக வருமானத்தை பதிவு செய்ததோடு, இதே ஆண்டில் நிறுவனத்தின் நிதி செயலாற்றுகையானது பாராட்டப்பட்டு அங்கீகரிக்கப்பட்டது. இந்தக் காலப்பகுதிக்கான மொத்த வருமானம் 36,445,000/- ரூபாவாகும். நிரந்தர பதவியணிக்கான சம்பள கொடுப்பனவு தவிர மொத்த மீண்டுவருஞ் செலவினம் 10,778,292/- ரூபாவாகும்.

(**இ**) **சவால்கள்**

உலகம் முழுவதிலுமுள்ள நாடுகளிலும் அதேபோன்று இலங்கையிலும் பொருளாதாரத்திற்கும் சமூகத்திற்கும் பிரதிகூலமான பாதிப்புகளை ஏற்படுத்திய COVID - 19 தொற்று நிலமையினை கவனத்திற் கொள்ளாது, ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனம் மெச்சத்தக்க நிறுவன கட்டமைப்புடன் இந்த சாவாலை வெற்றி கொண்டது. இணையவழி முறைக்கு மாற்றமடைந்ததன் மூலம் தொடர்ச்சியான கல்வி நடவடிக்கைகளை நடாத்திச் செல்வதற்கும் இரண்டாம் மொழியாக ஆங்கில மொழி கற்பித்தல் தொடர்பிலான கலைமானி பட்டம் சார்பில் குறிப்பிடத்தக்க மாணவர்களை பதிவு செய்து கூடிய வருமானத்தை ஈட்டியமை ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனத்திற்கு உள்ள ஆற்றலை சரியாக எடுத்துக் காட்டுகின்றது. அத்துடன் 2022 ஆம் ஆண்டின் பொருளாதார நெருக்கடி மற்றும் அதன் பெறுபேறு என்பவற்றின் மத்தியில் நிறுவனத்தின் பணிகளை மிக சரியாக பேணுவதற்கு ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனத்திற்கு முடியுமானது.

ஆயினும், தொற்றுநோய் நிலைமை சார்ந்த சவாலுக்கு முகங்கொடுப்பதற்கு ஆற்றல் இருந்தபோதிலும் பல காரணிகள் இந்த நிறுவனத்தை குறிப்பிடத்தக்க ஆபத்துமிக்க நிலைக்கு இட்டுச்சென்றது. சுதந்திரத்தின் பின்னர் இலங்கையின் கடும் பொருளாதார சவாலாகும். 2022 ஆம் ஆண்டில் முகங்கொடுக்க நேர்ந்த சவாலாகும் என்பதோடு, இதன் விளைவுகளுக்கு எதிர்வரும் ஆண்டுகளில் முகங்கொடுக்க நேரிடும். இதன் மூலம் ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் பாடநெறிகளுக்கான மாணர்களின் கேள்வியானது குறைவடைந்த போதிலும் இதுவரை அதன் சகல பாடநெறிகளும் வரலாற்றில் ஆகக்கூடுதல் மாணவர்களின் பதிவுடன் பலம்மிக்க நிதி செயற்பாட்டினையும் தக்கவைத்துக் கொள்ள முடியுமானது. ஆயினும், 2023 ஆம் ஆண்டு மற்றும் அதன் பின்னரான நிலைமை சவால் மிக்கதாக தெரிகின்றது. இலங்கை முகங்கொடுத்துவரும் கடும் பொருளாதார பின்னடைவு காரணமாக ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனத்திற்கு எதிர்கால சவால்களுக்கு முகங்கொடுப்பதற்கு புதிய அதேபோன்று திறமுறை ரீதியிலான எண்ணக்கருக்களுக்கு செல்லவேண்டியுள்ளது.

(**ஈ**) **எதிர்கால திட்டங்கள்**

சமூக மற்றும் பொருளாதார பின்னடைவுகளைக் கொண்டுள்ள 2023 ஆம் ஆண்டு சவால் மிக்க ஆண்டாக ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனம் இனங்கண்டுள்ளது. இந்த நிலைமையின் மத்தியில் ஆங்கில பட்டப்பின் படிப்பு

நிறுவனத்தினால் அதன் பாடநெறிகளை எதிர்கால மாணவர்களுக்கு மிக கவர்ச்சிகரமானதாக்குவதற்கு பல்வேறுபட்ட செயற்பாடுகளை ஆராய்ந்துள்ளதோடு, மாணவர்களுக்கு அவர்களுடைய கல்வி நடவடிக்கைகளை நடாத்திச் செல்வதற்கு இயலுமென உறுதிப்படுத்துவற்கு நெகிழ்ச்சிகரமான வழிமுறைகளைப் பின்பற்றியுள்ளது.

பட்டப்பின் படிப்பு மட்ட உயர்கல்வியுடன் இணைந்த எதிர்காலம் தொடர்பில் நிறுவனத்தின் அவதானிப்புரையானது பெரும்பாலும் கலப்பு வடிவத்தை பின்பற்றுமெனவும் முழுமையாக நேருக்குநேர் கற்றல் மற்றும் கற்பித்தல் முறைக்கு செல்லமாட்டாதென்பதாகும்.

இதற்கு காரணமாய் அமைந்துள்ளது பட்டப்பின் படிப்பினை படிக்கும் பெரும்பாலான மாணவர்கள் தொழில்புரியும் தொழில்சார்பாளர்களாவதும் ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனத்தினால் நாடு முழுவதுமுள்ள மாணவர்களை பதிவு செய்வதினாலும் கலப்பு முறையின் மூலம் வழங்கும் நெகிழ்ச்சி மிக்க முறையானது அவர்களை கவர்ந்துள்ளமையினாலாகும்.

ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் மீளாய்வு செயற்பாடானது 2023 ஆம் ஆண்டில் செய்யப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றதோடு, ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனம் மதிப்பீட்டு செயற்பாட்டிற்கும் ஆயத்தமாகின்றது.

(உ) ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனத்தில் நடாத்தப்படும் நிகழ்ச்சித் திட்டங்களும் மாணவர்களின் விபரங்களும்

ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனத்தினால் ஏற்பாடு செய்யப்படும் கல்வி நிகழ்ச்சித்திட்டங்களின் விரிவான வகைப்படுத்தலும் இந்நிகழ்ச்சித் திட்டங்களில் உட்சேர்க்கப்பட்ட மாணவர்களின் புள்ளிவிபரங்களும் வருமாறு.

முழுநேர நிகழ்ச்சித்திட்டங்கள்

அ. ஆராய்ச்சி மூலமான பட்டப்பின் பட்டங்கள்

1. கலாநிதி
2. தத்துவ முதுமானி

ஆ. கற்கைநெறிக் கருத்திட்டம் மற்றும் ஆராய்ச்சிக் கூறொன்றுடன் சேர்ந்த பட்டப்பின் பட்டங்கள்

1. இரண்டாம் மொழியாக ஆங்கில மொழி கற்பித்தல் தொடர்பிலான கலைமானி பட்டம்.
2. இரண்டாம் மொழி சூழ்நிலையில் இலக்கியம் கற்பித்தல் பற்றிய முதுமானிப் பட்ட பாடநெறி

இ. பட்டப்பின் டிப்ளோமா நிகழ்ச்சித்திட்டங்கள்

1. இரண்டாம் மொழியாக ஆங்கில மொழி கற்பித்தல் தொடர்பிலான பட்டப்பின் படிப்பு டிப்ளோமா.
2. இரண்டாம் மொழி சூழ்நிலையில் இலக்கியம் கற்பித்தல் தொடர்பிலான பட்டப்பின் படிப்பு டிப்ளோமா.
3. இரண்டாம் மொழி கல்வி பற்றிய பட்டப்பின் படிப்பு டிப்ளோமா
4. ஆங்கில மொழியினை தொழில்சார் ரீதியில் பயன்படுத்துவது தொடர்பிலான பட்டப்பின் படிப்பு டிப்ளோமா

ஒவ்வொரு நிகழ்ச்சித்திட்டத்திற்கும் பதிவுசெய்யப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை

நிகழ்ச்சித்திட்டம்	மொத்த மாணவர்களின் எண்ணிக்கை
தத்துவ முதுமானிப் பட்டம்	02
இரண்டாம் மொழியாக ஆங்கில மொழி கற்பித்தல் தொடர்பிலான முதுமானி பட்டம். (MA in TESL)	26
(M in TESL)	-
இரண்டாம் மொழியாக ஆங்கில மொழி கற்பித்தல் தொடர்பிலான டிப்ளோமா / கலைமானி பட்டம். (PG Dip/MA in TESL) - புதியது	169
இரண்டாம் மொழியாக ஆங்கில மொழி கற்பித்தல் தொடர்பிலான டிப்ளோமா / கலைமானி பட்டம். (PG Dip/MA in TESL) - பழையது	87
இரண்டாம் மொழி சூழ்நிலையில் இலக்கியம் கற்பித்தல் தொடர்பிலான கலைமானி பட்டம் (MA-TLSC)	113
இரண்டாம் மொழி கல்வி பற்றிய பட்டப்பின் படிப்பு டிப்ளோமா (PGDipBE)	52
ஆங்கிலமொழியை தொழில் ரீதியில் பயன்படுத்துதல் பற்றிய பட்டப்பின் படிப்பு டிப்ளோமா (PG Dip in PPE)	45
மொத்தம்	494

கல்வி ஆண்டுகளுக்காக ஒதுக்கப்பட்ட முழுநேர நிகழ்ச்சித்திட்டங்களில் இணைந்துள்ள மாணவர்களின் விபரம்

பாடநெறி	உள்வாங்கல் 2023	1ஆம் ஆண்டு மாணவர்கள் (பகுதி I)	2ஆம் ஆண்டு மாணவர்கள் (பகுதி II)	பட்டம் பெற்றோர்
தத்துவ முதுமானிப் பட்டம்	-	-	02	-
இரண்டாம் மொழியாக ஆங்கில மொழி கற்பித்தல் தொடர்பிலான டிப்ளோமா / கலைமானி பட்டம்.	59	128	95	PGDip -13 MTESL – 12 MA in TESL - 15
இரண்டாம் மொழி சூழ்நிலையில் இலக்கியம் கற்பித்தல் தொடர்பிலான கலைமானி பட்டம்	23	52	38	PGDip – 19 MA in TLSC –0
இரண்டாம் மொழி கல்வி பற்றிய பட்டப்பின் படிப்பு டிப்ளோமா	-	44	8	PGDip – 37
ஆங்கிலமொழியை தொழில் ரீதியில்	43	2	-	PGDip – 25

பயன்படுத்துதல் பற்றிய பட்டப்பின் படிப்பு டிப்ளோமா					
மொத்தம்	04	125	226	143	PGDip – 94 M – 12 MA – 15

தமக்குள்ள பணிகளின் அடிப்படையில் மாணவர்களுக்கு அவர்களுடைய பாடநெறிகளை தெரிவு செய்வதற்கான வசதிகள் ஏற்பாடு செய்யப்படும். திறந்த மற்றும் தொலைநோக்கு கற்றல் செயற்பாடு ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனத்தினால் பயன்படுத்தப்படுகின்றன. ஆதலால், அவர்களுக்கு பாடநெறிகளைப் பூர்த்தி செய்வதற்கு ஆகக்கூடுதலாக ஆறு (06) அல்லது ஏழு (07) வருடங்கள் வழங்கப்படுகின்றது.

மாணவர் செயலாற்றுகை – 2021/2022

ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனத்தினால் ஏற்பாடு செய்யப்படும் முழுநேர நிகழ்ச்சித்திட்டங்களில் கற்கைநெறி வாரியான மாணவர் செயற்திறனின் ஒரு வகைப்படுத்தல் கீழே தரப்பட்டுள்ளது.

ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனமானது கலப்பு (தொலைதூர மற்றும் நேரடியான) கல்வி முறைகளைப் பின்பற்றுகின்றமையால் நிகழ்ச்சித் திட்டமொன்றை நிறைவுசெய்வதற்கு மாணவர்களுக்குப் பதிவுத் திகதியிலிருந்து 06 வருடங்கள் வரை எடுக்கலாம். இது தொலைதூர கல்வி முறைமையொன்றின் உள்ளார்ந்தமான நெகிழ்வுத்தன்மையின் பகுதியாகும். ஆதலால், மாணவர் பட்டம்பெறும் எண்ணிக்கையைக் காட்டிலும், அவர்கள் உண்மையாகப் பதிவுசெய்துள்ள கற்கைநெறிகளை நிறைவுசெய்யும் மாணவர்களின் எண்ணிக்கையானது மாணவர் (மற்றும் நிறுவன ரீதியான) செயற்றிறனின் அதிசிறந்த குறிகாட்டி ஆகும்.

அட்டவணை 1 – **இறுதி மதிப்பீடுகளில் மாணவர் செயலாற்றுகை** 2021/2022
இரண்டாம் மொழி சூழ்நிலையில் இலக்கியம் கற்பித்தல் பற்றிய முதுமானிப் பட்ட பாடநெறி – புதிய பாடத்திட்டம்

பாடநெறி குறியீடு	பாடநெறி தலைப்பு
PGP8201	இரண்டாம் மொழிக் கல்வி அடிப்படையிலான தத்துவ மற்றும் சமூகவியல்
PGP8202	இரண்டாம் மொழிக் கல்விக்கான கல்வி உளவியல்
PGP9404	பயன்பாட்டு மொழியியல்
PGP8312	மொழி கற்பித்தலில் முறை
PGP9302	பாடத்திட்ட வடிவமைப்பு மற்றும் பொருள் மேம்பாடு
PGP9303	இரண்டாம் மொழியாக ஆங்கிலத்திற்கான மதிப்பீடு மற்றும் மதிப்பீடு
PGP8503	கற்பித்தல் பயிற்சி
PGP8313	ஆங்கில மொழி கற்பித்தலில் தொழில்நுட்பம்
PGP8314	ஆசிரியர் தொழில் மேம்பாடு, வழிகாட்டுதல் மற்றும் மேற்பார்வை

PGP9502	ஆங்கிலத்தை இரண்டாம் மொழியாகக் கற்பிப்பதற்கான சமூகவியல் சூழல்
PGPA402	ஆராய்ச்சி தொடர்பு
PGPA602	ஆராய்ச்சி முறை

பாடநெறி குறியீட்டு இலக்கம்	**பதிவு** (அ)	**தகைமை பெற்றோர்** (ஆ) (ஆ/அ%)	**தோற்றி யோர்** (இ) (இ/ஆ%)	**சித்தி அடைந் தோர்** (ஈ) (ஈ/இ%)	**பூர்த்தி செய்த நூற்றுவீதம்** (ஈ/ஆ%)
PGP8201	91	84 (92.3%)	70 (83.3%)	67 (95.7%)	79.8 %
PGP8202	120	96 (80%)	69 (71.9%)	69 (100%)	71.9 %
PGP9404	133	110 (82.7%)	85 (77.3%)	73 (85.9%)	66.4 %
PGP8312	96	89 (92.7%)	66 (74.2%)	66 (100%)	74.2 %
பாடநெறி குறியீட்டு இலக்கம்	**பதிவு** (அ)	**தகைமை பெற்றோர்** (ஆ) (ஆ/அ%)	**தோற்றி யோர்** (இ) (இ/ஆ%)	**சித்தி அடைந் தோர்** (ஈ) (ஈ/இ%)	**பூர்த்தி செய்த நூற்றுவீதம்** (ஈ/ஆ%)
PGP9302	105	70 (66.7%)	39 (55.7%)	பெறுபேறு நிலுவையிலுள்ளது ள்ளது	
PGP9303	109	61 (56%)	இறுதி மதிப்பீடு நிலுவையிலுள்ளது		
PGP8503	64	57 (89.1%)	இறுதி மதிப்பீடு நிலுவையிலுள்ளது		
PGP8313	57	45 (78.9%)	31 (68.9%)	28 (90.3%)	62.2 %
PGP8314	28	22 (78.6%)	15 (68.2%)	15 (100%)	68.2 %
PGP8315	07	05 (71.4%)	இறுதி மதிப்பீடு நிலுவையிலுள்ளது		
PGP8316	19	14 (73.7%)	இறுதி மதிப்பீடு நிலுவையிலுள்ளது		
PGP9502	51	50 (98%)	49 (98%)	48 (98%)	96 %
PGPA402	36	35 (97.2%)	34 (97.1%)	பெறுபேறு நிலுவையிலுள்ளது	
PGPA602	36	35 (97.2%)	33 (94.3%)	பெறுபேறு நிலுவையிலுள்ளது	

அட்டவணை 2 – **இறுதி மதிப்பீடுகளில் மாணவர் செயலாற்றுகை** 2021/2022
இரண்டாம் மொழியாக ஆங்கில மொழி கற்பித்தல் தொடர்பிலான பட்டப்பின் படிப்பு டிப்ளோமா / கலை முதுமாணி – PGDip (TESL) - **பழைய பாடத்திட்டம்**

பாடநெறி குறியீடு	**பாடநெறி தலைப்பு**
ELP1301	இலங்கையில் ஆங்கிலம் கற்பித்தல்/கற்றல் ஆகியவற்றின் உளவியல் - சமூக சூழல்
ELP1201	பயன்பாட்டு மொழியியல்
ELP1202	முறைமையில் சிக்கல்கள் மற்றும் வளர்ச்சிகள்
ELP1203	சோதனை மற்றும் மதிப்பீடு
ELP1101	கற்பித்தல் இலக்கணம் மற்றும் நான்கு திறன்கள்
ELP1102	பாடத்திட்டம் மற்றும் பொருள் வடிவமைப்பு
ELP1103	ELT இல் தொழில்நுட்பம்
ELP1104	ELT இல் மேலாண்மை
ELP1105	ஆசிரியர் மேம்பாடுகள் மற்றும் மேற்பார்வை
ELP2101	ஆராய்ச்சி முறைகள் மற்றும் வடிவமைப்பு
ELP2102	ஆராய்ச்சி தொடர்பு
ELP2301	போர்ட்போலியோ

பாடநெறி குறியீட்டு இலக்கம்	**பதிவு** (**அ**)	**தகைமை பெற்றோர்** (**ஆ**) (**ஆ/அ**%)	**தோற்றியோர்** (**இ**) (**இ/ஆ**%)	**சித்தி அடைந்தோர்** (**ஈ**) (**ஈ/இ**%)	**பூர்த்தி செய்த நூற்றுவீதம்** (**ஈ/ஆ**%)
ELP1301	10	01 (10%)	0	-	-
ELP1201	07	04 (57.1%)	01 (25%)	01 (100%)	25%
ELP1202	06	02 (33.3%)	01 (50%)	01 (100%)	50%
ELP1203	06	02 (33.3%)	01 (50%)	பெறுபேறு நிலுவையிலுள்ளது	
ELP1101	06	05 (83.3%)	02 (40%)	01 (50%)	20%
ELP1102	08	05 (62.5%)	02 (40%)	பெறுபேறு நிலுவையிலுள்ளது	
ELP1103	02	0	-	-	-
ELP1104	02	0	-	-	-

ELP1105	01	0	-	-	-
ELP2101	11	07 (63.6%)	07 (100%)	07 (100%)	100%
ELP2102	13	11 (84.6%)	10 (90.9%)	10 (100%)	90.9%
ELP2301	13	11 (84.6%)	10 (90.9%)	10 (100%)	90.9%

அட்டவணை 3 – **இறுதி மதிப்பீடுகளில் மாணவர் செயலாற்றுகை** - 2021/2022

இரண்டாம் மொழி கல்வி பற்றிய பட்டப்பின் படிப்பு டிப்ளோமா - புதிய பாடத்திட்டம்

பாடநெறி குறியீடு	பாடநெறி தலைப்பு
PGP8304	விமர்சன ரீதியாக படித்தல்
PGP9401	அடிப்படை இலக்கியக் கருத்துகள் மற்றும் இலக்கியக் கோட்பாடு அறிமுகம்
PGP8101	கல்வி எழுத்து
PGP9402	நாவல் மற்றும் சிறுகதை
PGP8305	கவிதை
PGP9403	நாடகம்
PGP9501	இலக்கியம் கற்பித்தலில் கல்விசார் சிக்கல்கள்
PGP9301	இலக்கியத்தில் மதிப்பீடு மற்றும் மதிப்பீடு
PGP8306	ELT சூழலில் இலக்கியம் கற்பித்தல்
PGPA601	ஆராய்ச்சி முறை
PGPA401	மேம்பட்ட ஆராய்ச்சி தொடர்பு

பாடநெறி குறியீட்டு இலக்கம்	பதிவு (அ)	தகைமை பெற்றோர் (ஆ) (ஆ/அ%)	தோற்றியோர் (இ) (இ/ஆ%)	சித்தி அடைந்தோர் (ஈ) (ஈ/இ%)	பூர்த்தி செய்த நூற்றுவீதம் (ஈ/ஆ%)
PGP8304	40	32 (80%)	28 (87.5%)	26 (92.9%)	81.3%
PGP9401	38	32 (84.2%)	27 (84.4%)	27 (100%)	84.4%
PGP8101	40	37 (92.5%)	30 (81.1%)	28 (93.3%)	75.7%
PGP9402	41	30 (73.2%)	24 (80%)	23 (95.8%)	76.7%
PGP8305	39	31 (79.5%)	27 (87.1%)	27 (100%)	87.1%
PGP9403	45	34 (75.6%)	30 (88.2%)	21 (70%)	61.8%
PGP9501	37	26 (70.3%)	24 (92.3%)	24 (100%)	92.3%

PGP9301	35	17 (48.6%)	16 (94.1%)	16 (100%)	94.1%
PGP8306	36	22 (61.1%)	20 (90.9%)	20 (100%)	90.9%
PGPA601	43	33 (76.7%)	33 (100%)	31 (93.9%)	93.9%
PGPA401	41	38 (92.7%)	33 (86.8%)	29 (87.9%)	76.3%

அட்டவணை 4 – **இறுதி மதிப்பீடுகளில் மாணவர் செயலாற்றுகை** 2021/2022 **இரண்டாம் மொழி சூழ்நிலையில் இலக்கியம் கற்பித்தல் பற்றிய முதுமானிப் பட்ட பாடநெறி – பழைய பாடத்திட்டம்**

பாடநெறி குறியீடு	பாடநெறி தலைப்பு
LTP1201	விமர்சன ரீதியாக படித்தல்
LTP1202	அடிப்படை இலக்கியக் கருத்துகள் மற்றும் இலக்கியக் கோட்பாடு அறிமுகம்
LTP1101	கல்வி எழுத்து
LTP1102	நாவல் மற்றும் சிறுகதை I
LTP1103	நாவல் மற்றும் சிறுகதை II
LTP1104	கவிதை I
LTP1105	கவிதை II
LTP1203	நாடகம்
LTP1204	இலக்கியம் கற்பித்தலில் கல்விசார் சிக்கல்கள்
LTP1106	இலக்கியத்தில் மதிப்பீடு
LTP1107	ELT சூழலில் இலக்கியம் கற்பித்தல்
LTP2101	ஆராய்ச்சி முறை
LTP2102	இலக்கியத்திற்கான பாடத்திட்ட வடிவமைப்பு மற்றும் மேம்பாடு
LTP2103	மேம்பட்ட ஆராய்ச்சி தொடர்பு

பாடநெறி குறியீட்டு இலக்கம்	பதிவு (அ)	தகைமை பெற்றோர் (ஆ) (ஆ/அ%)	தோற்றியோர் (இ) (இ/ஆ%)	சித்தி அடைந்தோர் (ஈ) (ஈ/இ%)	பூர்த்தி செய்த நூற்றுவீதம் (ஈ/ஆ%)
LTP1201	பதிவுசெய்யப்பட்ட மாணவர்கள் இல்லை				
LTP1202	பதிவுசெய்யப்பட்ட மாணவர்கள் இல்லை				
LTP1101	பதிவுசெய்யப்பட்ட மாணவர்கள் இல்லை				
LTP1102	பதிவுசெய்யப்பட்ட மாணவர்கள் இல்லை				
LTP1103	01	01 (100%)	0	-	-
LTP1104	01	0	-	-	-

LTP1105	பதிவுசெய்யப்பட்ட மாணவர்கள் இல்லை				
LTP1203	03	02 (66.7%)	01 (50%)	01 (100%)	50%
LTP1204	01	0	-	-	-
LTP1106	பதிவுசெய்யப்பட்ட மாணவர்கள் இல்லை				
LTP1107	பதிவுசெய்யப்பட்ட மாணவர்கள் இல்லை				
LTP2101	பதிவுசெய்யப்பட்ட மாணவர்கள் இல்லை				
LTP2102	பதிவுசெய்யப்பட்ட மாணவர்கள் இல்லை				
LTP2103	01	0	-	-	-

அட்டவணை 5 – **இறுதி மதிப்பீடுகளில் மாணவர் செயலாற்றுகை** 2021/2022
ஆங்கில மொழியினை தொழில்சார் ரீதியில் பயன்படுத்துவது தொடர்பிலான பட்டப்பின் படிப்பு டிப்ளோமா (PGDip. in PPE)

பாடநெறி குறியீடு	பாடநெறி தலைப்பு
GP8601	முக்கிய மொழித் திறன்கள் மற்றும் மேம்பட்ட இலக்கணம்
GP8301	தொடர்ச்சியான தொழில்முறை மேம்பாடு (மென் திறன்கள் மற்றும் தகவல் தொழில்நுட்ப திறன்கள் உட்பட)
GP8501	தொழில்முறை தொடர்பு I - தொழில்முறை எழுதும் திறன்
GP8401	தொழில்முறை தொடர்பு II முன்னிலைப்படுத்தல் மற்றும் தொழில்நுட்பம் மத்தியஸ்த தகவல்தொடர்பு திறன்
GP8302	தொழில்முறை தொடர்பு III - இணக்கப்பேச்சு மொழி
GP8303	திட்ட முன்மொழிவுகளை எழுதுதல் மற்றும் முன்வைத்தல்
GP8602	தகவல்தொடர்பு தத்துவார்த்த முன்னுதாரணங்கள்
GP8603	நிதி மற்றும் வங்கி நோக்கத்திற்கான ஆங்கிலம்

பாடநெறி குறியீட்டு இலக்கம்	பதிவு (அ)	தகைமை பெற்றோர் (ஆ) (ஆ/அ%)	தோற்றியோர் (இ) (இ/ஆ%)	சித்தி அடைந்தோர் (ஈ) (ஈ/இ%)	பூர்த்தி செய்த நூற்றுவீதம் (ஈ/ஆ%)
PGP8601	34	25 (73.5%)	23 (92%)	23 (100%)	92%
PGP8301	38	30 (78.9%)	28 (93.3%)	28 (100%)	93.3%
PGP8501	34	22 (64.7%)	22 (100%)	22 (100%)	100%
PGP8401	39	31 (79.5%)	26 (83.9%)	26 (100%)	83.9%

PGP8302	34	22 (64.7%)	22 (100%)	22 (100%)	100%
PGP8303	35	23 (65.7%)	23 (100%)	23 (100%)	100%
